## அத்தியாயம் 26

காரிலிருந்து இறங்கிய வருண் நீண்டநாளுக்கு பிறகு அந்த வீட்டை பார்த்ததும் பழைய நிழைவுகளில் மூழ்கினான். அவன் பின்னே வந்த விக்னேஷ் " மச்சி என்னாச்சுடா" என்று கேட்கவும் அவனை அமைதியாக பார்த்து விட்டு அவன் தோளில் கை போட்டு உள்ளே சென்றான்.

வருண் உள்ளே வந்ததும் யோகா வந்து அவன் கையை பிடித்து " வெல்கம் மாஸ்டர் செஃப்!" என்று சொல்ல அவன் சிரித்து கொண்டே அவளின் தலையை கலைத்துவிட்டு " இன்னிக்கு நம்ம பண்ண போற லஞ்ச்ல இவங்க எல்லாரும் ப்ளாட் ஆயிடனும்., ஓகேவா அஸிஸ்டெண்ட்?" என்று கேட்க அவள் தலையாட்டிவிட்டு அவனுடன் கிச்சனுக்குள் சென்றாள்.

உள்ளே சென்றவன் மடமடவென்று வேலையை ஆரம்பித்தான். யோகா அவனுக்கு உதவ சமையல் களை கட்ட ஆரம்பித்தது.

கீதாவோ அவனை கண்டுகொள்ளாமல் அவினாஷுடன் அரட்டை அடிக்க ஆரம்பித்தாள். அவன் ஏதோ சொல்ல அவள் சத்தமாக சிரித்ததை கேட்டதும் காய்கறியை வெட்டிக் கொண்டிருந்தவன் கோபத்தில் விரலை வெட்டிவிட யோகா பதறி போய் அவன் கையை அங்கிருந்த டேப்பில் காட்டினாள்.

பின்னர் பேன்டேஜ் போட்டு விட்டவள் " வருண் நீ வேனா ரெஸ்ட் எடுத்துக்கோ! நான் குக் பண்றேன்" என்றதும் வருண் " ஹேய்! இது ஒரு சின்ன காயம் தான்., இதுக்காக ஏன் இவ்ளோ டென்சன் ஆகுற? விக்கி சொன்ன மாதிரி நீ ரொம்ப எமோஷனல் தான். கம் ஆன் லெட்ஸ் குக்" என்று சொல்லிவிட்டு சிரித்ததும் இருவரும் சமையலை தொடர்ந்தனர்.

கீதாவின் கழுத்தில் கை போட்டு கட்டி கொண்டு சோஃபாவின் கைப்பிடியில் அமர்ந்திருந்த ஜேசி " மாம்! நீ எனக்காக குக் பண்ண போற நாளுக்காக தான் நான் காத்திருக்கேன்., ஆனா நீ தான் ஒரு ஹாட் வாட்டர் கூட போட மாட்ரியே" என்று கையை இறுக்க கத்திய கீதா " டேய்! நீ பாசம் காட்டுறனு சொல்லி என்னை சாகடிக்காத, விடுடா" என்று அவன் கையை விலக்க முயன்றாள்.

ரியா வந்து அவன் தலையில் கொட்டி " விடுடா அவளை! " என்று சொல்ல "சின்னம்மா! தாயா நீ? இப்பிடி கொட்டுற?" என்று சொல்லி கீதாவை விட்டுவிட்டு தலையை தடவி கொண்டான்.

பின் அனுவை பார்த்து " ஹாய் டார்லிங்! நியூ ஜாப் எப்பிடி போகுது??" என்று கேட்க ஸ்ரீதேவி முறைத்தாள்.

" ஜாப்கு என்ன டார்லிங்? மொக்கையா போகுது! என்னோட டி.எல் தான் சரியான ஹிட்லர் " என்று ரியாவை பார்த்து கொண்டே சொல்ல ரியா சிரித்தாள்.

" நீ ஒழுங்கா வொர்க் பண்ணா நான் ஏன் உன்னை டார்ச்சர் பண்ண போறேன்??" என்றவளை பார்த்த அவினாஷ் " உன்னையுமா அனு?" என்று பரிதாபத்துடன் கேட்டு வைத்தான்.

பின் கிச்சனை பார்த்தவன் " டேய்! இன்னுமாடா முடியல?" என்று குரல் கொடுக்க யோகா " ஃபைனல் டச் நடக்குதுடா" என்று பதிலளித்தாள். ஜேசி கிச்சனுக்குள் சென்றவன் " டாட்! நீங்க ஜெர்மனில இருந்தப்போ நான் உங்க குக்கிங்க ரொம்ப மிஸ் பண்ணேண். இதுங்கலாம் சாப்பாடுங்கிற பேருல எதை எதையோ செஞ்சு குடுத்து என்னை மெலிய வச்சிட்டுதுங்க" என்று சொல்லிவிட்டு சமையலை வாசம் பிடிக்க ஆரம்பித்தான்.

வருண் அவனுடன் பேசிக் கொண்டே சமையலை முடித்து டேபிளில் எடுத்து வைத்து விட்டு அனைவரையும் சாப்பிட அழைத்தான். அனைவரும் அமர அனு எல்லா பாத்திரங்களையும் திறந்து பார்த்தவள் "அண்ணா! எல்லாமே நான் வெஜ்ஜா இருக்கு! " என்று விழிக்க வருண் கூலாக "சோ வாட்?" என்று கேட்டு விட்டு அமர்ந்தான்.

" இல்ல. அண்ணி வெஜிடேரியன் அதனால தான்" என்று யோசித்து கொண்டே சொல்ல வருண் " எனக்கு அதுலாம் மறந்துடுச்சு அனு " என்று சாதாரணமாக சொல்ல கீதா டேபிளை விட்டு எழுந்து கிச்சனுக்குள் சென்றாள்.

" என்ன இப்பிடி பண்ணிட்டடா" என்று சொல்லியபடி அவளை பின் தொடர்ந்து கிச்சனில் நுழைந்த ரேவதி " கீத்து! என்ன பண்ண போற?" என்று கேட்டுக் கொண்டே வந்தவள் கீதா பாத்திரத்தில் எதையோ எடுக்க அவளையே பார்க்க ஆரம்பித்தாள்.

கீதா அரிசிமாவை எடுத்தவள் அதில் தேங்காய், கொத்தமல்லி , கறிவேப்பிலையை போட்டு பெருங்காயத்தை தூவி தண்ணீர் விட்டு பிசைய ஆரம்பித்தாள்.

" நீ என்ன பண்ணுற அண்ணி??" என்று உள்ளே நுழைந்தாள் பிரியா .

" திஸ் இஸ் அக்கி ரொட்டி" என்று புன்னகையுடன் கூறிய கீதா அதை கையால் தட்டி தவாவில் போட்டு ரொட்டியாக சுட்டாள்.

ப்ரித்ஜிலிருந்த சாஸை எடுத்து கொண்டவள் " இது எங்க ஆச்சி எனக்கு சின்ன வயசுல பண்ணி தருவாங்க! ரொம்ப டேஸ்டா இருக்கும் " என்று அவர்களுக்கு விளக்கிய படி டேபிளில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தாள். அதை பார்த்த மற்றவர்களும் சாப்பிட தொடங்கினர். இடையிடையில் பேசிய ஜேசியை தவிர்த்து அங்கே வேறு ஒரு சத்தமும் எழவில்லை.

அனைவரும் சாப்பிட்டதும் பாத்திரங்களை சுத்தம் செய்ய ஆரம்பித்த பிரியா வருண் அவளுக்கு உதவ வந்ததும் மௌனமாக மறுத்துவிட்டு அவளே வேலையை தொடர்ந்தாள்.

வருண் அவளது செய்கையை பார்த்தவன் " இப்போ எதுக்கு நீ இப்பிடி உம்முனு முகத்த தூக்கி வச்சிருக்க பிரியா?" என்று கேட்க அவள் அமைதியாக இருந்தாள்,. பின்னர் " நீ ஏன் வேணும்னே அண்ணிய ஹர்ட் பண்ணுர வருண்?? அவங்க தான் உன்னை கண்டுக்கவே இல்லையே ! அப்றம் ஏன் இப்பிடி நடந்துக்கிற?" என்று அமைதியாக கேட்டாள்.

" நான் எதுவுமே பண்ணலையே "

" இஸிண்ட்?? உனக்கு நல்லாவே தெரியும் அவங்களுக்கு நான் வெஜ் பிடிக்காதுனு. தென் வொய் டின்ட் யூ குக் அ வெஜிடேரியன் டிஸ்?"

" அவளுக்கு சமைச்சு போட நான் இங்க வரல! இங்க நான் வந்தது என்னோட ஃப்ரெண்ட்ஸ்காக., அவளுக்காக இல்ல"

" நீ ரொம்ப மாறிட்ட வருண். உன்னால எப்பிடி கீத்துவ இந்த மாதிரி நடத்த முடியுது? அவங்க மேல எவ்ளொ கேரிங்கா இருந்தவன் நீ?? இப்போ ஏதோ விரோதிய நடத்துற மாதிரி நீ பிஹேவ் பண்ணுறது கொஞ்சம் கூட சரி இல்ல வருண்"

" வாட்?? விரோதியா?? அவங்கள கூட மன்னிக்கலாம். ஆனா உனக்காக உயிரையே குடுப்பேனு சொல்லிட்டு நம்மள விட்டுட்டு போறவங்கள மன்னிக்கவே கூடாது"

அவர்களின் உரையாடல் சீரியஸாக செல்வதை கவனித்த அனு " அண்ணா! ப்ளீஸ்! இனிமே இத பத்தி நாம பேச வேண்டாம்! அண்ணி கேட்டாங்கனா ரொம்ப வருத்தப்படுவாங்க" என்று அவனை அமைதிபடுத்தினாள்.

வருணோ " அவ என்ன ஆனாலும் ஐ டோண்ட் கேர்., ஃபர்ஸ்ட் ஆஃப் ஆல் நீ அவளை அண்ணினு சொல்லுறத நிறுத்து. எனக்கு கேக்கவே அசிங்கமா இருக்கு"

" அண்ணா! திஸ் இஸ் டூ மச்"

" இஸிண்ட்?? ரொம்ப லவ் பண்ணிட்டேன். அதான் வெறுப்பும் அதிகமாவே இருக்கு., நல்லா கேட்டுக்கோ இனிமே நீ அவளை அண்ணினு சொல்லி என்னை அசிங்கப்படுத்தாத, திஸ் இஸ் லாஸ்ட் வார்னிங்" என்று எச்சரித்துவிட்டு வெளியே வந்தவன் அங்கே அவன் கூறிய வார்த்தைகளை கேட்ட அதிர்ச்சியில் நின்ற கீதாவை சிறிதும் கண்டுகொள்ளாமல் சென்றான்.

பின்னர் அனைவரும் அவரவர் வீட்டுக்கு திரும்ப தோழிகள் நால்வரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.கீதாவின் கவனம் அவர்களின் பேச்சில் இல்லை. அவள் காதில் வருண் கூறிய வார்த்தைகளே மாறி மாறி ஒலித்தது. மூவரிடமும் ரெஸ்ட் எடுக்க போவதாக சொல்லிவிட்டு அறைக்குள் வந்தவளின் கண்ணில் அவள் அறியாமல் கண்ணீர் வரவே அதற்கு மேல் முடியாமல் உடைந்து போய் அழ ஆரம்பித்தாள்.

பின் தானாகவே அமைதியானவள் " நானும் ரொம்ப லவ் பண்ணிட்டேன்., அதனால தான் உன்னை விட்டு ரொம்ப தூரம் போக விரும்புறேன்" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டே படுத்தவள் அப்படியே உறங்கியும் போனாள்.

---

மறுநாள் அலுவலகம் முடிந்து வீட்டுக்கு வந்தவளை அனு கால் செய்து ஃபீனிக்ஸ் மாலுக்கு அழைத்தாள். சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தவள் ரியாவும் ரேவதியும் அவளுடன் இருக்கவே மூவரும் மாலையே ஒரு ரவுண்ட் அடித்தனர் .

அங்கே அவினாஷுடன் வந்த வருண் கீதாவை அங்கே எதிர்பார்க்க வில்லை. அனுவை முறைத்தவன் கீதாவை பார்த்ததும் அவன் முகம் இறுகியது.

கீதாவோ மனதில் " இவனை பாத்தாலே என்னோட நிம்மதி கெட்டு போகுது" என்று அங்கிருந்து வேறு புறம் செல்ல திரும்ப பின்னே நடந்து வந்து கொண்டிருந்த ஒருவன் மீது மோதிவிட்டாள்.

விழாமல் சமாளித்து நின்றவள் அந்த கருப்பு டீசர்ட் காரனிடம் " சாரி சார்., நீங்க வந்தத கவனிக்கல" என்று கூற அவனும் பணிவுடன் " இட்ஸ் ஓகே ., நோ ப்ராப்ளம் " என்று சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தான். வருணை கடந்து அவன் செல்லும் போது அவன் நண்பனிடம் கூறிய வார்த்தைகள் அவன் காதில் தெளிவாக விழுந்தது.

" டேய் செம ஃபிகர் டா! இந்த மாதிரி பொண்ணை எத்தனை தடவை வேணாலும் இடிக்கலாம்டா" என்று சொல்லிவிட்டு மோசமாக வர்ணிக்க பல்லை கடித்த வருண் அவன் பின்னே சென்றான்.

அவனது தோளில் தட்டி திருப்பியவன் அவன் திரும்பியதும் கன்னத்தில் அறைந்தான். அவனை பேச விடாமல் புரட்டி எடுக்க அங்கே கூட்டம் கூடியது. கீதாவோ என்னாச்சு என்று பதறி ஓடியவள் அங்கே வருண் கருப்பு டீசர்ட்டை போட்டு துவைத்து கொண்டிருக்க கடுப்பானாள்.

அவன் அருகில் சென்று அடிக்க சென்றவனின் கையை பிடித்து தடுத்தவள் "இனாஃப்! எதுக்கும் ஒரு லிமிட் இருக்கு வருண்" என்று கோபமாக சொல்ல வருண் அவள் கையை உதறினான்.

" உன்னோட இந்த கோவம் எப்பொவுமே உனக்கு நல்லது இல்ல வருண்" என்று சொல்லி இடித்தவனை எச்சரித்து அனுப்பினாள்.

அவளது செய்கையில் எரிச்சலடைந்த வருண் " ஒருத்தன் உன்னை இடிச்சிட்டு போறான், அப்போவும் நீ பொறுமையா தான் இருப்பல! என்ன பொண்ணு நீ?? நியாயப்படி நீ அவனை அடிச்சிருக்கனும்" என்று சொல்ல கீதா "அடிச்சா மட்டும் அவன் என்ன திருந்திடுவானா? லிஸன் வருண், நீ என்ன பத்தி என்ன வேனா நெனச்சுக்கோ. பட் நீ பண்ணுற இந்த ரவுடியிசத்துக்கு என்னோட பேர யூஸ் பண்ணாத" என்று சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பினாள்.

" லிசன் அவி, இனிமே அவளுக்கு என்ன ஆனாலும் நான் கவலை பட போறதே இல்ல,இரிட்டேட்டிங் இடியட்" என்று சொல்லிவிட்டு அவனும் அங்கிருந்து சென்றான்.

இருவரிடையே உள்ள பிரச்சனையை எப்படி தீர்ப்பது என்று தெரியாமல் விழித்தனர் அவர்களின் நண்பர்கள்....

வருணும் கீதாவும் இவ்வாறு ஒருவரை ஒருவர் முறைத்து கொண்டே இருப்பது அவர்களுடைய நண்பர்களுக்கு வருத்தத்தை கொடுத்தது. அவர்களிடையே என்ன பிரச்சனை என்று தெரியாமல் தலையை பிய்த்து கொண்டனர் அவர்கள்.

இந்நிலையில் எல்லாரும் எங்காவது டூர் சென்றால் கொஞ்சம் மனநிம்மதியை கொடுக்கும் என்று ஜேசி நினைக்க மற்றவர்களும் அதை ஏற்று கொண்டனர். கீதாவும் வருணும் தாங்கள் வரவில்லை என்று கூறவும் ஜேசி கடுப்பாகி விட்டான்.

வார இறுதியில் சந்தித்த போது கீதா " ஜேசி! நான் எங்கேயும் வரல., எனக்கு கொஞ்சம் வொர்க் இருக்கு" என்று வருணை பார்த்து கொண்டே சொல்ல அவனும் தனக்கு டூர் வருவதற்கான மூட் இல்லையென்று சொல்லிவிட்டான். ஒரு நிமிடம் இருவரையும் முறைத்த ஜேசி மனதிலிருப்பதை கொட்டி விட்டான்.

" என்ன தான் பிரச்சனை உங்க ரெண்டு பேருக்கும்?? நாங்களும் ஒரு வருஷமா இப்போ சரியாகும் அப்போ சரியாகும்னு வெயிட் பண்ணா அது நடக்கவே நடக்காது போல. மாம், நீ எனக்கு அடிக்கடி அட்வைஸ் பண்ணுவ தானே, பேசுனா தீராத ப்ராப்ளம் எதுவும் கெடயாதுனு. அப்போ நீங்களும் உங்க பிரச்சனையை பேசி தீத்துக்கலாமே! ஏன் இப்பிடி நீங்களும் கஷ்டப்பட்டுகிட்டு அடுத்தவங்களையும் வருத்தப்பட வைக்கிறிங்க?"

" ஜெயா" என்று வருண் அவனை அமைதிபடுத்த முயற்சிக்க அவனை பார்த்தவன் " டாட்! நீங்க லவ்ல எவ்ளோ க்ரேசியா இருந்திங்கனு இங்க எல்லாருக்குமே தெரியும். தென் வொய் டிட் யூ சேஞ்ச் அ லாட்???" என்று குரலில் வலியுடன் கேட்டான்.

அவனை தடுக்க யாரும் வரவில்லை. அங்கிருந்த அனைவருக்குமே மனதில் அந்த வார்த்தைகள் தான் ஓடியது.

" நீங்க ரெண்டு பேரும் எங்களுக்கு முக்கியம். உங்கள்ல யார் கஷ்டப்பட்டாலும் எங்களுக்கும் அது வலிய தான் குடுக்கும். இன்னும் வீட்டு பெரியவங்க யாருக்கும் இந்த விஷயம் தெரியல. அப்பிடி தெரியா வந்தா

அவங்க ரியாக்ஸன யோசிச்சு பாருங்க, தயவு பண்ணி நிதானமா யோசிங்க !" என்று சொல்லிவிட்டு தன் சிகையை கோதிக் கொண்டான்.

கீதாவுக்கு அவன் கூறிய விஷயங்கள் நியாயமாக தோன்றினாலும் தனக்கும் வருணுக்கும் இடையே எதுவும் இல்லையென்று அவள் ஏற்கெனவே தீர்மானித்து விட்டதால் அவள் அதை பற்றி யோசிக்கவில்லை.

ஆனால் தங்களுடைய பிரிவு நண்பர்களை வருத்துவதை அவள் விரும்பவில்லை. அவள் சுற்றுலாவுக்கு சம்மதித்தாள். வருணும் அவர்களுக்காவே வர ஒத்து கொண்டான்.

ஊட்டி....

காட்டேஜிலிருந்து வெளியே பார்த்த ரியா உள்ளங்கைகளை உரசி கன்னத்தில் வைத்து கொண்டாள். யோகா ஸ்கார்ஃபை கழுத்தை சுற்றி போட்டவள் கீதாவை அழைத்து மலைகளின் அழகை காட்டினாள். அந்த இயற்கையின் அழகை காண கோடி கண்கள் வேண்டும் என்று மனதில் நினைத்த கீதா அதை வாய் விட்டு சொல்லியும் விட்டாள்.

பொட்டானிக்கல் கார்டனை பார்க்க அனைவரும் ஆர்வமாக இருக்க அங்கே நுழைந்ததும் எல்லாரும் ஒவ்வொரு புறமாக பிரிந்து சென்றுவிட்டனர். கீதா அங்கிருந்த க்ளாஸ் ஹவுஸ் என்ற செடிகள் வளர்க்கப்படும் கண்ணாடிவீட்டை பார்வையிட்டு கொண்டிருந்தாள்.

பின்னர் வெளியே வந்தவள் காலாற புல்வெளியில் நடந்து கொண்டிருந்தாள். அவளுடன் சேர்ந்து கொண்டாள் ரேவதி. எப்படியாவது எல்லா பிரச்சனைகளையும் தீர்த்து பழைய படி வருணும் கீதாவும் மாற வேண்டும் என்பதே அவளின் எண்ணம். அதை கீதாவிடம் மறைக்காமல் வெளியிட்டாள். புன்னகையுடன் அவள் கூறிய விஷயங்களை கேட்டாள் கீதா.

" அண்ணி! நம்ம ஃபேமிலில எல்லாரும் உங்க மேரேஜ தான் பெருசா எக்பெக்ட் பண்ணிட்டு இருக்காங்க தெரியுமா?? ஆச்சி, வேணூ தாத்தா எல்லாருமே தான். பட் நீங்க ரெண்டு பேரும் சின்ன கொழந்தைங்க மாதிரி அடிச்சிகிறிங்கனு தெரிய வந்தா அவங்க ரொம்ப ஃபீல் பண்ணுவாங்க" இவ்வாறு பலவிதமாக அவள் மனதை கரைக்க முயன்றாள் ரேவா.

" ரேவா! உங்க எல்லாருக்கும் ஒரு விஷயம் இன்னும் புரியல. நானும் வருணும் பிரிஞ்சிட்டோம். இனிமே நாங்களே நெனச்சாலும் எங்களால ஒன்னு சேர முடியாதுங்கிறது தான் உண்மை. இதை நான் ஒரு வருஷத்துக்கு முன்னாடியே ஏத்துக்கிட்டேன். அதனால தான் வருண் கோவமா பிஹேவ் பண்ணுரப்போ கூட என்னால அமைதியா இருக்க முடிஞ்சிது. என்னை பொறுத்த வரைக்கும் வருண் ஒரு தேர்ட் பெர்ஸன். அவனோட பிரசென்ஸ் என்னைக்குமே என்னை பாதிக்கலை. அவனோட வெறுப்பை பத்தியோ கோவத்தை பத்தியோ எனக்கு கொஞ்சம் கூட கவலையும் இல்ல. இட் வாஸ் ஓவர். நவ் ஹீ இஸ் நத்திங் டு மீ. இது தான் உண்மை. சீக்கிரமா இத நீங்க எல்லாரும் ஏத்துப்பிங்க" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நகர திரும்பியவள் பின்னே நின்று கொண்டிருந்த வருணை பார்த்ததும் ஒரு கணம் நின்றாலும் பின்னர் எதுவும் நடக்காதது போல சென்றுவிட்டாள்.

வருணுக்கோ அதை கேட்டதிலிருந்து உள்ளே கொதித்து கொண்டிருந்தது. மாலை அனைவரும் வீடு திரும்பும் வரை யாரிடமும் பேசாதவன் இருட்டியது காட்டேஜின் வெளியே போடப்பட்டிருந்த நாற்காலில் அமர்ந்தவன் காட்டேஜ் பணியாள் வாங்கி வந்திருந்த விஸ்கி பாட்டிலை திறந்தவன் கண் மண் தெரியாமல் குடிக்க ஆரம்பித்தான்.

அவன் காதுகளில் "என்னை பொறுத்த வரைக்கும் வருண் ஒரு தேர்ட் பெர்ஸன். அவனோட பிரசென்ஸ் என்னைக்குமே என்னை பாதிக்கலை. அவனோட வெறுப்பை பத்தியோ கோவத்தை பத்தியோ எனக்கு கொஞ்சம் கூட கவலையும் இல்ல. இட் வாஸ் ஓவர். நவ் ஹீ இஸ் நத்திங் டு மீ. இது தான் உண்மை" என்ற கீதாவின் வார்த்தைகள் மாறி மாறி ஒலிக்க தடுக்க யாருமின்றி குடித்தவன் தடுமாறியபடியெ உள்ளே வர எழுந்தான்.

தட்டுதடுமாறி நடந்தவன் அனைவரும் ஹாலில் உட்கார்ந்திருக்க அவர்களுக்கு நடுவில் நின்று கொண்டு அவர்களிடம் தன் கிளையண்ட்ஸ் அடிக்கும் லூட்டிகளை விவரித்து சிரித்து கொண்டிருந்தாள்.

தன் அறைக்கு செல்லும் போது வருண் அவள் மீது தெரியாமல் மோதிவிட கீதா " பாத்து வர வேண்டியது தானே வருண்" என்று கூற அவன் அறைக்கு செல்ல இருந்தவன் கீதாவின் குரலில் நின்று விட்டான்.

திரும்பி அந்த ஹாலின் நடுவே வந்தவனின் தடுமாற்றத்தை பார்த்த கீதா எதோ தவறு இருப்பாதாக உணர்ந்தவள் கையை கட்டியபடி அவனையே பார்த்தாள்.

தடுமாற்றத்துடன் வந்தவன் கீதாவின் எதிரில் நின்று " யூ ஆர் ராங், நான் பாத்திருக்கவே கூடாது" என்று குழறலுடன் சொல்ல கீதா அதிர்ச்சியுடன் " குடிச்சிருக்கியா வருண்?" என்று கேட்டு அவனது முகத்தையே பார்த்தாள்.